# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - தொகுதி - 4

தொகுப்பாசிரியர்

முனைவர் ச.வேணுகோபால்

தொகுப்பு குழு

பேரா.அ.கீதா, பேரா.ஆ.ரேவதி, பேரா.செ.குமார்,
பேரா.வி.நந்தினி, பேரா.கு.கீர்த்திகா,
பா.தனேசு, கு.மகாவீரபிரசாத்

சுடர்மணி

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் தொகுதி - 4



"Sadhanai Semmal" K.K.BALUSAMY

30 YEARS OF EXCELLENCE

ACCREDITED WITH GRADE B+ NAAC



தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் மனித வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை, ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள், பண்பாட்டு மரபுகள், சமூக அமைப்புகள் ஆகியவற்றை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளன. இத்தகைய செழுமையான பாரம்பரியத்தை ஆராய்ந்து, அதன் தற்கால பொருத்தப்பாட்டினை ஆய்வு செய்யும் இக்கருத்தரங்கம் மிகவும் காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

9 788197 342400

சுடர்மணி

sudarmanipathipagam@gmail.com

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

### தொகுதி - 4

தொகுப்பாசிரியர்
முனைவர் ச.வேணுகோபால்

தொகுப்பு குழு
பேரா.அ.கீதா பேரா.அ.ரேவதி பேரா.செ.குமார்
பேரா.வி.நந்தினி பேரா.கு.கீர்த்திகா
பா.தனேசு கு.மகாவீரபிரசாத்

சுடர்மணி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

**தொகுப்பாசிரியர்**
**முனைவர் ச.வேணுகோபால்**

முதல் பதிப்பு : **2025**

வெளியீடு : **சுடர்மணி**

23, 8வது மேற்கு தெரு, மேத்தா நகர் விரிவு,

குன்றத்தூர், சென்னை - 600069.

அலைபேசி : 9842730808

அச்சாக்கம் டுடே ஆப்செட், சென்னை

பக்கங்கள் - XXII + 372 = 394

**விலை : ரூ .400/-**

## TAMIL ILAKKIYANKALIL VALVIYAL

**Editor :**

**Dr.S.VENUGOPAL**

First Edition **: 2025**

Published by **SUDARMANI**

No. 23, 8th West Street, Metha Nagar (Extn.)

Kundrathur, Chennai - 600069, Phone: 9842730808

e-mail: sudarmanipathipagam@gmail.com

Printed at : Today Offset, Chennai - 5.

Pages: XXII + 372 = 394 **Price : ₹ 400/-**

**ISBN : 978-81-973424-0-0**

227. திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல்
ரா.பிரியதர்ஷினி -1365
228. கவிஞர் அறிவுமதி ஒரு சகாப்தம்
ம.ஹரிணி -1369
229. சங்க இலக்கியங்களில் வாழ்வியல் நெறிகள்
ரா.சூர்யா -1372
230. புறநானூற்றில் பெண்களின் வாழ்நிலை
ம.மதுமிதா -1375
231. பாரதிதாசன் நனைவில் குறிஞ்சித் திட்டு
முனைவர் அ.குருமூர்த்தி -1377
232. மலேசியா வாழ் புலம்பெயர்ந்தோர் தமிழர்களுக்கான சொல்வயல் அகரமுதலி
தனேசு பாலகிருட்டிணன், மகாவீரபிரசாத் குப்பன், காந்திமதி ஸ்ரீதரமோகன் -1383
233. சிறுதெய்வங்கள் மற்றும் வழிபாடு
ரா.கவிதா & முனைவர் ம. பிரகாஷ் -1398
234. **"METHODES INNOVANTES D'ENSEIGNEMENT / APPRENTISSAGE DE LA LANGUE ET DE LA LITTERATURE" KAVITHA KRISHNARAJ 1404**
235. சுதந்திரப் போரில் ஜம்புத்தீவுப் பிரகடனம் -
முனைவர் ம.பிரகாஷ் 1409
236. சுந்தரபாண்டியன் படைப்புலகம்
க.கௌசல்யாதேவி & முனைவர் ம.பிரகாஷ் 1415

# சிறுதெய்வங்கள் மற்றும் வழிபாடு

[1]ரா.கவிதா &
[2]முனைவர் ம. பிரகாஷ்
[1]பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
[2]உதவிப் பேராசிரியர் ரூநெறியாளர்
தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி
நிறுவனம், பல்லாவரம், சென்னை – 600 117,
தமிழ்நாடு – இந்தியா.

## முன்னுரை

தமிழர்கள் எப்பொழுது தனித்தனிக் குடும்பங்களாக வாழத் தொடங்கினார்களோ அப்பொழுது அவர்களிடம் இறைவன் நம்பிக்கை ஏற்பட்டது என்று கூறலாம். மனிதர்களின் மனதில் தோன்றிய அச்ச உணர்வே தெய்வ நம்பிக்கையை உண்டாக்கியது எனலாம். எனினும் தெய்வ நம்பிக்கை தோன்றிய காலத்தைக் கணக்கிட முடியாது தொல்காப்பியர் காலத்திலேயே பல தெய்வ வழிபாடு இருந்துள்ளதைச் சான்றுகளின் வழிக் காணலாம்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெரம மணல் உலகமும்
முல்லை ,குறிஞ்சி ,மருதம், நெய்தல் எனச்
சொல்லிய மறையாற் சொல்லவும் படுமே”**

**(தொல்காப்பியம், அகம். நூற்.எண் : 05)**

என்கின்ற நூற்பாவின் மூலம் திருமால், முருகன், இந்திரன், வருணன் போன்ற தெய்வங்களை வழிபடுவதை அறியமுடிகிறது. எனவே, இறை வழிபாடு என்பது தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இருந்திருக்கக்கூடும் என்பதும் இறைநம்பிக்கை என்பது இருந்த காரணத்தினாலேயே தொல்காப்பிய நூற்பாவில் இறைவன் பெயர்கள் இடம் பெறுவது கொண்டு இறைவழிபாட்டின் பழமை அறியமுடிகிறது. மேலும் கொற்றவை என்னும் பெண் தெய்வ வழிபாட்டினையும் முக்கால மக்கள் கொண்டு இருந்தனர் என்பதனை தொல்காப்பியம்,

**"மரம் கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அகத்திணைப்**
**புறனே"(தொல்காப்பியம், புறம்,நூற்.எண் :04)**

என்ற நூற்பா விளக்குகிறது. (கொற்றவை துர்க்கை அல்லது காளி). இவை மட்டுமல்லாது மக்கள் இயற்கைப் பொருள்களையும் இறைவனாகவே நினைத்து வழிபட்டார்கள்,அதனையும் தெய்வமாகக் கருதி போற்றினார்கள் என்பதனையும் நாம் தொல்காப்பியத்தின் வழியே அறிய முடிகின்றது.
இதனைத் தொல்காப்பியம்,

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்**
**கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே"**
**(தொல்காப்பியம், புறம், நூற். எண் : 33)**

என்பதனைக் கொண்டு இயற்கை இறைவழிபாட்டினை நாம் உணர முடிகிறது. எனவே பழங்காலத்தில் இயற்கையை இறைவனாகக் கருதி மக்கள் வழிபட்டார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாக அமைகின்றது. மேலும் பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதையும் நாம் பெறமுடிகின்றது.

நமது முன்னோர்களான தாத்தா, பாட்டி, பூட்டன்மார்களும் அதற்கு முன்னால் வாழ்ந்த மூதாதையர்களுக்கு வீரம், அச்சம், நல்ல ஒழுக்கநெறிகள், தவறை கண்டித்தல், பிறருக்காக வாழ்தல், மேலும் சமூக மக்களின் மேல் கொண்ட அக்கறை, தவறைக் கண்டித்தல், நடுவுநிலைமை, தர்மம், ஊருடன் ஒத்து வாழ்தல் போன்ற நல்ல ஒழுக்கங்கள் மற்றும் கலாச்சார வாழ்க்கைக்கு அடிப்படை ஆதாரமாக இருந்த பண்பாட்டில் தெய்வ வழிபாடு முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பின் முதல் சிறப்பு சிறுதெய்வ வழிபாடு. தன்னுடைய மூதாதையரை தெய்வமாக வழிபடுவது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு தொடர்பினை ஏற்படுத்துவது சிறுதெய்வ வழிபாடு. அதில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிறுதெய்வ வழிபாடு பற்றிய ஆய்வு.

**சிறுதெய்வ வழிபாடு**

மனிதன் தன்னுடைய நிலையில் இருந்து தடுமாறிச் செல்லும் போது அவனுடைய மனதை நல்வழிப்படுத்துவதற்கு ஒரு காரணியாக செயல்படுவது தெய்வ வழிபாடு. அதிலும் சிறுதெய்வ வழிபாடு என்பது நம்முடைய முன்னோர்களை வணங்கி அவர்களின் அருளைப் பெறுவது. தாங்கள் வழிபடும் தெய்வம் தம்முடைய முயற்சிக்கு துணையாக வரும் என்று மக்கள் தெய்வத்தின்மேல் கொண்டுள்ள நம்பிக்கையின் வழி அறிவோம். இதற்கு சான்றாக சங்க இலக்கியங்களில் ஒன்றான முல்லைப்பாட்டில் நப்பூதனார்

**"யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லோடு,**
**நாழி கொண்ட, நறுவீ முல்லை**
**அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,**
**பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப" (முல்லைப்பாட்டு)**

நல்லோர் விரிச்சி கேட்டல் என்னும் தலைப்பில் யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள், அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவி தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக விரிச்சி கேட்டு நிற்பதாக கூறியுள்ளார். ஒவ்வொரு நிகழ்விற்கும் இயற்கை சக்திதான் காரணம் என்ற எண்ணத்தில் வழிபடத் தொடங்கியதன் தோற்றமே நாம் வழிபடும் சிறுதெய்வ வழிபாடு.

**கோவில் அமைவிடங்கள்**

சிறுதெய்வக் கோவில்கள் பொதுவாக ஊரின் எல்லை, குளக்கரை. களத்துமேடு, ஊர்மந்தை, கண்மாய்க்கரை, வயற்புறம், மலை அடிவாரம், ஆற்றங்கரையோரம் மற்றும் காடு ஆகிய இடங்களில் அமைந்து இருக்கும். ஆகவே அந்த இடங்கள் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே சிறுதெய்வங்கள் பல இடங்களில் காவல் தெய்வங்களாகவும், குலதெய்வங்களாகவும் இருக்கும்.

**வழிபடும் முறை**

பொதுவாக நிலவுடைமைக் கொண்ட சமூக அமைப்பில் உள்ள அனைத்து பிரிவினரும் இச்சிறுதெய்வ வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். மேலும்

சிறுதெய்வங்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் ஆயுதங்களை ஏந்தி இருப்பது அவற்றின் பொதுத்தோற்றம் ஆகும். சிறுதெய்வ வழிபாட்டு முறையில் தெய்வங்களுக்குச் செய்யப்படும் சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் எந்தவித விதிகளுக்கும் உட்படாத வண்ணம் கிராம மக்களின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் காலகாலமாகச் செய்யப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு தெய்வத்திற்கு தகுந்தார் போல் வழிபாட்டு முறைகள் மாறுபடும்.

பழந்தமிழர்கள் போர் முறைகள் எல்லாம் கொண்டு வாழ்ந்த காரணத்தினால், வெற்றிக்காக இறைவனைக், கடவுளை வணங்குகின்ற தன்மையானது அவர்களிடையே நிலவிவந்த செய்தியானது அறியமுடிகின்றது. வீரர்கள் வெற்றியின் பொருட்டுக் கொற்றவை என்னும் தெய்வத்தை வணங்கி வந்தனர் இதனை ,

**“மரம் கடை கூட்டிய துடிநிலை சிறந்த**

**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே”**

**(தொல்காப்பியம், புறத் நூற்பா :59)**

எனும் நூற்பாவில் வெற்றிபெற்றவர்கள் உடுக்கை அடித்து வெற்றியைக் கொண்டாடுவதும், வெற்றியைத் தந்த கொற்றவையின் சிறப்பை எடுத்துப் புகழ்ந்து கொண்டாடுவதும், வெட்சித்திணைச் சார்ந்ததாகும் என்பது உரைக்கப்பட்டுள்ளது. இந்த கொற்றவை தெய்வ வழிபாட்டின் சிறப்பினைச் சிலப்பதிகாரம் வேட்டுவவரியில் 6 முதல் 19 வரையிலான அடிகளில் உரைக்கப்பட்டுள்ளது. கானவர்கள் தங்கள் வாழ்வை மேம்படுத்த வழிபட்டனர். கொற்றவைக்குப் பூசை போட்டு விழா எடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதும் அறியப்படுகின்றது. எனவே வெற்றிக்காகப் பழந்தமிழர்கள் கொற்றவையை வழிபட்டனர் என்ற இந்த செய்தியின் வழியாகவும் ,இறைவழிபாடும், இறைக் கொள்கையும் பழந்தமிழர்களிடையே இருந்து வந்ததை அறியலாம்.

**தெய்வ வழிபாட்டில் படையல்**

சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடலும், மாமிசப்படையிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பலியிடல் என்பது காலம்காலமாக மக்களிடத்தில் இருந்து வருகின்ற ஒரு வழிபாட்டு முறை ஆகும். அதாவது ஒரு உயிரைக் கொடுப்பதன் மூலமாக மற்றொரு உயிர்

காப்பாற்றப்படுகிறது என்ற நம்பிக்கை இன்றளவும் உள்ளது.

பழந்தமிழர்கள் இடம் மது அருந்துவது,மாமிசம் உண்பதும் வழக்கமாக இருந்தது என்பதற்குப் பல்வேறு சான்றாதாரங்கள் நமக்கு சங்க இலக்கியப் பனுவல்கள் மூலம் கிடைக்கின்றன. எனவே பெரும்பாலான தமிழர்கள் மதுவும் மாமிசமும் உண்டு வாழ்ந்து வந்தார்கள் என்பதில் ஐயமில்லை. தங்கள் பழக்க வழக்கப் படி வழிபாடு செய்தனர் பழந்தமிழர்கள்.ஆடு கோழிகளைப் பலியிட்டு மது மாமிசங்களைப் படைத்து வழிபாடு செய்தனர். இதனைச் சங்க இலக்கியச் சான்றுகள் வழி ஆராயலாம்.

**“மரிக் குரல் அறுத்துத் தினைப் பிரப்பு இரீஇச்**
**செல் ஆற்றுக் கவலை பல்இயம் கறங்கத்**
**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா**
**வேற்றுப் பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்**
**பேஎயக் ககோஎீஇயள் இவள் எனப்படுதல்**

**நோதக் கன்றே தோழி ”**

**(குறுந்தொகை, பாடல் எண் : 263)**

இப்பாடல் தோழியே நீராடும் ஆற்றின் நடுத்திட்டிலே அன்னை வெறியாட்டு எடுக்கக்கருதி இருக்கின்றாள். உன்னுடைய காதல் நோயை எந்த வகையிலும் தணிக்க முடியாத வேறு பல தெய்வங்களை போற்ற நினைத்தாள். ஆட்டுக்குட்டியை அறுத்து துணையால் செய்த பலியைப் படைத்து பலவகையான வாத்தியங்களும் முழங்கும் படி பூசைபோடும் போது தெய்வங்கள் பூசாரிகளின் மேல் தோன்றுமே தவிர,உன் காதல் நோய்க்கு மருந்தாகாது. இத்தகைய தெய்வங்களை வாழ்த்து என் மகள் ஆகிய இவள் பேயால் பிடிக்கப்பட்டால் என்று அன்னை தெய்வத்தின் மேல் பழி சுமத்துதல் வருந்தத்தக்கது என்ற பொருளை உணர்த்துகின்றது இப்பாடல். தெய்வத்திற்கு ஆடு போன்றவற்றை பலி இடுதலும், அந்த தெய்வத்தினை வணங்குதலும் ஆகிய செய்தியானது இப்பாடலின் வழியாகப் பெறமுடிகின்றது. மேலும்,

**“வாடாப் பூவின் இமையா நாட்டத்து**

**நாற்ற உணவி னோரும்” (புறநானூறு, பாடல் எண் : 62)**

என்ற பாடல் நுவாடாத கற்பகத்தின் தாரினையும், இமைக்காத கண்ணினையும் நாற்மாகிய உணவையும்

உடைய தேவர்களும், என்னும் பொருளையும் உணர்த்துவதாக அமைகின்றது.எனவே பழந்தமிழர்களிடம் தெய்வங்களுக்குப் பலி இட்டு வணங்குகின்ற வழக்கமானது இருந்தது என்பதனைச் சான்றுடன் பெற முடிகின்றது.

**முடிவுரை**

சிறுதெய்வ வழிபாட்டினைக் கடைபிடிப்பவர்கள் கிராமப்புற மக்கள். தெய்வ வழிபாடு என்பது அவர்கள் வாழ்வியல் நிகழ்வாக இருக்கும். தெய்வங்களை அவர்கள் குடும்ப உறுப்பினர்களைப் போல நினைத்து வாழ்வார்கள். கிராமப்புற மக்கள் சிறுதெய்வ வழிபாட்டின் அச்சாணிகள் என்றே சொல்லலாம். இச்சிறுதெய்வ வழிபாடனது நம் முன்னோர்களின் பண்பாடு, கலாச்சாரம், ஒற்றுமை, நல்லொழுக்கம் போன்றவற்றிற்கு சிறந்த சான்றாகும். மனிதகுல வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது தெய்வ வழிபாடாகும்.

**பார்வை நூல்கள்**

1. தொல்காப்பியம், கௌரா பதிப்பகம், சென்னை, 2017.

2. முல்லைப்பாட்டு, ஆராய்ச்சியுரை மறைமலையடிகள் தமிழ் மண் பதிப்பகம், சென்னை, 2015.

3. குறுந்தொகை, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 2023.

4. புறநானூறு, கவிதா பதிப்பகம், சென்னை> 2019.